பிள்ளைக்களத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை. திருமதி. S. வனிதா M.Sc.,

ம.அ.எண்.2/2024 –25 நாள் – 31.05_2024

பொருள் – மனைபிரிவு அனுமதி – நாமக்கல் மாவட்டம் – பரமத்தி வேலூர் வட்டம் – பரமத்தி ஊராட்சி ஒன்றியம் – பிள்ளைக்களத்தூர் ஊராட்சி – சர்வே எண்.238/2Bல் 1.03 (4170.00 ச.மீ) ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவிற்கு உள்ளாட்சி அளவில் இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக

பார்வை
1. அரசாணை எண்.79 ,வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3) துறை , நாள்.04.05.2017.
2. அரசாணை எண்.18 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள்.04.02.2022.
3. அரசாணை எண்.138 , வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3) துறை , நாள்.04.06.2004.
4. உதவி இயக்குநர் , நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். NKL/B0DRE1B1 /26709/2024/TCP நாள். 21.05.2024.
5. K PALANIVELU AND B SATHEESKUMAR, D.No. No. 16, Mariyamman Kovil Street, Mavuretti, Paramathivelur, Namakkal,637207 என்பவரது விண்ணப்பம் நாள். 20.04.2024.

****

உத்தரவு

பார்வை 4ல் காணும் கடிதத்தின்படி நாமக்கல் மாவட்டம் , பரமத்தி வேலூர் வட்டத்திற்கு உட்பட்ட பரமத்தி ஊராட்சி ஒன்றியம் , பிள்ளைக்களத்துார் ஊராட்சி/கிராம சர்வே எண். 238/2B ல் 1.03 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவிற்கு உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது.

உத்தேச மனை பிரிவிற்கான பரப்பு – 4170.00 ச.மீ / 1.03 ஏக்கர்

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவு அமையும் இடத்திற்கு மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற குடியிருப்பு மனைபிரிவு வரைபடத்தினை அங்கீகரிக்கும் பொருட்டு கடிதம் வரப்பெற்றது.

மேற்படி நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனுதாரர் மனை அளவுகளை பிரித்து அடிப்படை வசதிகளை மேற்கொண்டுள்ளார். மேலும் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவேண்டிய 341.85 ச.மீ (10.69%) பொது உபயோகப் பரப்பினை உள்ளாட்சிக்கும் , 18.60 ச.மீ (0.56%) பரப்பினை மின்சார வாரியத்திற்கும் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.14000/–(ரூபாய் பதிநான்காயிரம் மட்டும்) , கூராய்வு கட்டணமாக ரூ.1000/– (ரூபாய் ஒராயிரம் மட்டும்) ஊராட்சிக்கு செலுத்தியுள்ளார்.

இவற்றின் அடிப்படையிலும் நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ஒப்புதல் அடிப்படையிலும் பிள்ளைக்களத்தூர் ஊராட்சி/கிராம சர்வே எண். 238/2B ல் 1.03ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவிற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊராட்சி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள் –

1.பார்வை4ல் காணும் உதவி இயக்குநர் , நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் உத்தேச மனையிட தொழிற்நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும்.

2.உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றி அமைக்க கூடாது.

3.ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதியில்லை

4.மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால் உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்.

5.அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலில் அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவிற்குமனுதாரர் கட்டுபட்டவர் ஆவார்.

6.பத்திர பதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.

7.திறந்தவெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்காக உயர் அழுத்த/சாதாரண மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின்வசதி செய்து கொள்ள அனுமதியில்லை.

8.விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைபிரிவும் பத்திரபதிவு செய்யும்போது , மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திட வேண்டும்.

9.மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ , மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்வரும் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனைபிரிவு முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

தலைவர் ,
பிள்ளைக்களத்தூர் ஊராட்சி

பெறுதல்

K PALANIVELU AND B SATHEESKUMAR,
D.No. No. 16, Mariyamman Kovil Street,
Mavuretti, Paramathivelur,
Namakkal,637207

நகல் – 1.உதவி இயக்குநர் , மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , நாமக்கல்
2. சார் பதிவாளர் , பரமத்தி